துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (29–7–2004) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–48 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

68. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் திரு. எஸ். முத்தையா அவர்களை கோயமுத்தூர் தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் (கூடுதல் ஆயம்) கூடுதல் உறுப்பினர் (நீதித் துறை) ஆக நியமித்தது குறித்து வணிக வரிகள் (இ2) துறையின் அரசாணை (2டி) எண் 68, நாள் 9–6–2004–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

69. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம் கோட்டம்–1) முப்பத்தி இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

70. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் இருபத்தி எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம்

ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

71. 2002—2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் இருபத்தி எட்டாவது ஆண்டறிக்கையும், கணக்குகளும். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

72. 2002—2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் இருபத்தி ஒன்பதாவது ஆண்டறிக்கையும், கணக்குகளும். (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் [மத்திய சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

73. 2002—2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முப்பத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் [மத்திய சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

74. 2002—2003 ஆம் ஆண்டிற்கான திருநெல்வேலி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

75. 2002—2003 ஆம் ஆண்டிற்கான அரியலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

76. 2002—2003 ஆம் ஆண்டிற்கான பெரம்பலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

77. 2002—2003 ஆம் ஆண்டிற்கான கோயமுத்தூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

78. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தூத்துக்குடி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

79. 2002–2003 ஆம் ஆண்டிற்கான திண்டுக்கல் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

47. மானியக் கோரிக்கை எண் 43 – சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)

48. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் செயல்முறைத் திட்டம், 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)

49. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் மக்கள் சாசனம், 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)

50. மானியக் கோரிக்கை எண் 4 – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2004–2005. (தமிழ், ஆங்கிலம்)

51. 2004–2005 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும் (தமிழ், ஆங்கிலம்)

52. 2004–2005 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு.

53. 2004–2005 ஆம் ஆண்டின் முதல் துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

54. நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள். (2004–2005) (தமிழ்)